**றுவன்வெல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 25 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து றுவன்வெல்ல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் இலக்கம் 01 இன் 21(உ) பிரிவின் பிரகாரம் உரிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுத் தரவுகளுடன் உள்ளபடியான தரவுகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை.

(ஆ) நியமத்தின் 21(இ) பிரிவின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 25,000 தொகையான பெதங்கொடையில் அமைந்துள்ள பின்னகொல்ல ஹேன பெயருடைய காணி மற்றும் 16 ஏக்கர் 07 பேர்ச் அளவான ஏனைய 10 காணிக் கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப் பணங்களுக்குரிய பதவியணிப் படி ரூபா 187,996 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சப்ரகமுவ மாகாண சபை பிரதம செயலாளருக்குரிய 04 வாகனங்களின் பெறுமதியான ரூபா 5,548,000 மோட்டார் வாகனமும் வண்டியும் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,669,947 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,065,709 ஆக இருந்ததுடன் வேறுபாடு ரூபா 2,838,128 ஆகும்.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 18,981 கூட்டுத்தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,752,094 ஆக இருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 570(இ), 571 மற்றும் 572 ஆம் பிரிவுகள் | 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 2,027,034 தொகையான வைப்புக்கள் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) இலங்கைக் குடியரசின் சப்ரகமுவ மாகாணசபையின் நிதி விதிக்கோவை | |
| 261.2.2 விதி | 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 656,091 தொகையான முற்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,247,946 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை

விஞ்சிய வருமானம் ரூபா 1,360,432 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,608,378 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம், தண்டப் பணமும் பிடியாணைக் கட்டணமும் மற்றும் வாடகை வருமானம் முறைவடந்தமை, சம்பளம் மற்றும் படிகள், வழங்கல் மற்றும் உபகரணங்கள், போக்குவரத்துத் தொடர்பாடல்கள், அத்தியவசிய சேவைகள் செலவினம் அதிகரித்தமையும் நிதி விளைவில் மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,256 | 2,828 | 428 |
| (ii) | வாடகை | 10,185 | 8,187 | 1,998 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 846 | 339 | 507 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,200 | 15,616 | 584 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,759,926 ஆக இருந்ததுடன் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,756,035 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 361,184 ஆக இருந்தது.

**3.2 ஒப்பந்த நிருவாகம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசறு செயற்திட்டத்தின் நிதி உதவியின் அடிப்படையில் சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான இந்துரான ஐக்கிய விவசாய அமைப்புடன் ரூபா 1,904,007 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையில் 2013 மார்ச் 15 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது.

அந்த வேலையின் கொடுப்பனவு அறிக்கையின் வேலை விடய இலக்கம் 19 இன் கீழ் கட்டிடத்தின் கூரையின் பிலி மற்றும் தண்ணீர் வழிந்தோடிச் செல்வதற்கு அமானோ தகரம் ஈடுபடுத்தி அமைக்கப்பட்டு பொருத்துவதற்காக 463.68 அடி நீளத்திற்காக ரூபா 122,875 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பீலியின் 51.66 அடி நீளம் மற்றும் தண்ணீர் வடிந்து செல்லும் 308.02 அடி நீளம் பொருத்தப்படாது அதற்காக ரூபா 95,315 தொகை நிறைவேற்றப்படாத வேலைக்காக செலுத்தப்பட்டிருந்தது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2014 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 08 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கணக்காய்வு ஐய வினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 4,323,107 ஆகும்.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்